Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JUNE 03 2025

செவ்வாய்க்கிழமை 03, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 252 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## “178 மன்றங்கள் தொங்குகின்றன”

நாடு முழுவதும் மே 06ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் 339 உள்ளூராட்சி மன்றங்களில் 161 சபைகளின் பதவிக்காலம் திங்கட்கிழமை (02) ஆரம்பமானது என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. மீதமுள்ள 178 சபைகள் நிர்வாகக் குழப்பத்தில் உள்ளன என்றும் நீதிமன்ற வழக்கு காரணமாக கல்முனை நகர சபை மற்றும் கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட எல்பிட்டிய பிரதேச சபை ஆகிய இரண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கு மே 06ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

தொடர்ச்சி P2



“பொது நிதியை தவறாகப் பயன்படுத்தினால்

# சட்டம் பாயும்”

அனைத்து குடிமக்களும் தங்கள் வரிக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று திங்கட்கிழமை (02) வலியுறுத்திய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, வரி வருவாய் முழுமையாகப் பாதுகாக்கப்படும் என்றும், பொது நிதியை தவறாகப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை (ஜூன் 2) காலை நடைபெற்ற ‘தேசிய வரி வாரத்தின்’ தொடக்க விழாவில் பேசிய ஜனாதிபதி, பொதுப் பணத்தின் ஒவ்வொரு ரூபாயும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காகத் தனது சொந்த உத்தியோகபூர்வ செலவினங்களை முடிந்தவரைக் குறைத்துள்ளதாகக் கூறினார். மோசடியால் நிலைநிறுத்தப்பட்ட கறுப்புப் பொருளாதாரத்தை ஒழிப்பதாகவும், பொது நிதியைப் பாதுகாக்க ஒரு சட்டப்பூர்வமான மற்றும் பொறுப்புணர்வுள்ள அமைப்பை நிறுவுவதாகவும் அவர் உறுதியளித்தார். ஜனாதிபதியின் பாதீட்டில் செலவினங்களைக் குறைக்க நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்தார்.

தொடர்ச்சி P2





## நிதி அமைச்சின் செயலாளர் ஓய்வு

நிதி அமைச்சின் தற்போதைய செயலாளர் மஹிந்த சிறிவர்தன இந்த மாத இறுதியில் தனது பதவியில் இருந்து ஓய்வு பெறுவார் என்று ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, திங்கட்கிழமை (02) அறிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை (02) காலை நடைபெற்ற தேசிய வரி வாரத் தொடக்க விழாவின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஓய்வு பெற்ற பிறகு, ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) மாற்று நிர்வாக இயக்குநராக புதிய சர்வதேச பணியை சிறிவர்தன மேற்கொள்வார், இது இலங்கையை மற்ற ஆறு நாடுகளுடன் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## மாதம் ஒருமுறை இருவரையும் பார்க்கலாம்

கடூழிய சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சர்கள் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நலின் பெர்னாண்டோ ஆகியோர் மாதத்திற்கு ஒரு முறை தங்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களைப் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள் என்று சிறைச்சாலைகள் துறை தெரிவித்துள்ளது. சிறைச்சாலை ஆணையர் காமினி திசாநாயக்க கூறுகையில், இது அனைத்து கைதிகளுக்கும் பொருந்தும் விதி. வழக்கமாக ஒரே நேரத்தில் மூன்று பேருக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதற்கிடையில், இரண்டு முன்னாள் அமைச்சர்களும் ஒரே பொதுவான பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



முல்லைத்தீவில் பெரும் சோகம்

## 2 யுவதிகள், 2 இளைஞர்கள் நீரில் மூழ்கி பலியாகினர்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவேறு சம்பவங்களில், இரண்டு யுவதிகளும், இளைஞன் ஒருவனும் சிறுவனும், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள பெரும் சோகமான சம்பவம், ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2







## AIஐ பயன்படுத்தி தேடும் பொலிஸார்

குற்றப் புலனாய்வு திணைக்களம் AI (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பத்தை முதன்முறையாகப் பயன்படுத்தி, சந்தேக நபர்கள் இருவரின் முகங்களை ஒத்த, புகைப்படங்களை வடிவமைத்து, பொதுமக்களின் உதவியை நாடியுள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தொடர்பான விசாரணை பிரிவு இந்த படங்களை அனுப்பிவைத்துள்ளது.

தொடர்ச்சி P2

## அசோக சேபால கைது



தலவாக்கலை, லிந்துலை நகர சபையின் முன்னாள் நகர முதல்வர் அசோக சேபால, அரசாங்கத்துக்கு 2.38 மில்லியன் ரூபாவை நட்டத்தை ஏற்படுத்தினார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால், திங்கட்கிழமை (02) கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “கொவிட் பரிசோதனை வேண்டும்”



LP 8.1 எனப்படும் கொவிட் மாதிரிகளின் துணை மாறுபாடு தற்போது சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தியா மற்றும் ஹாங்காங்கில் பரவி வருகின்றன. இந்த துணை வகை மாறுபாடுகள் குறித்து நமது நாட்டில் எந்த வித பரிசோதனைகளும் நடைபெறுவதாகக் காண முடியவில்லை. இந்த துணை மாறுபாடு திரிபுகள் தொடர்பாக எமது நாட்டிலும் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பாணந்துறையில் துப்பாக்கி

## இயங்காததால் இலக்கு தப்பியது



பாணந்துறை, வலான கெமுனு மாவத்தை பகுதியில் திங்கட்கிழமை(02) காலை 8 மணியளவில் துப்பாக்கியால் சுட முயற்சித்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

முகங்களை முழுமையாக மூடிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் இருவர், மற்றுமொரு நபரொருவரை இலக்கு வைத்து துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாகவும், ஆனால், துப்பாக்கி இயங்கவில்லை. மூன்று தடவைகள் முயற்சித்தபோதும் அந்த முயற்சி தோல்வியடைந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடர்ச்சி P2



## ரவியின் மேன்முறையீடு உயர்நீதிமன்றால் தள்ளுபடி

முன்னாள் நிதியமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தனக்கு எதிரான இலஞ்ச குற்றச்சாட்டுகளைத் தொடர அனுமதித்த உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை எதிர்க்க அவருக்கு எந்த உரிமையும் இல்லை என்று தீர்ப்பளித்துள்ளது.

மேன்முறையீடு செய்வதற்கான உரிமை தானாகவே வராது, ஆனால், சட்டத்தால் வெளிப்படையாக வழங்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

2016 பெப்ரவரி மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் ரூ. 11 மில்லியனுக்கும் அதிகமான வாடகை செலுத்துதல்கள் மற்றும் சலுகைகள் தொடர்பாக கருணாநாயக்க மற்றும் தொழிலதிபர் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோர் மீது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

தொடர்ச்சி P2

## கொழும்பு–பலாலிக்கு பயணிகள் விமான சேவை

பு.கஜிந்தன்




கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை பயணிகள் விமானச் சேவைகளை டேவிட் பிரிஸ் ஏவியேஷன் (DP Aviation) ஆரம்பிக்கின்றது.

அரசாங்கத்தின் எதிர்கால திட்டங்களுக்கு அமைவாக உள்ளூர் விமானச் சேவையை விருத்தி செய்யும் நோக்கில் டேவிட் பிரிஸ் ஏவியேஷன் நிறுவனமானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விமான சேவையினை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# சட்டம் பாயும்

பொதுமக்களின் வரிகளில் இருந்து ஒவ்வொரு ரூபாயையும் பாதுகாக்க இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் கூறினார். அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

நாட்டில் வரி செலுத்துவதில் தயக்கம் இருப்பதை பல்வேறு புள்ளிவிவரங்கள் நிரூபிக்கின்றன. இதற்குக் காரணம் என்ன? ஒன்று நமது அரசியல் அதிகாரம். நமது நாட்டில் வரிப் பணத்தை அரசியல் அதிகாரம் எவ்வாறு பயன்படுத்தியுள்ளது என்பது குறித்து வரி செலுத்துவோர் மற்றும் பொதுமக்களிடமிருந்து நிறைய விமர்சனங்கள் உள்ளன.

இந்த நாட்டின் வரி செலுத்துவோரிடமிருந்து வசூலிக்கப்படும் பணம் அரசியல் அதிகாரத்தால் அத்தியாவசிய நோக்கங்களுக்காக முறையாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற செய்தியை முதலில் வரி செலுத்துவோருக்கு வழங்க வேண்டும். அந்தப் பொறுப்பு எனக்கும், அமைச்சகங்களுக்கும், அரசியல் அதிகாரத்திற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீங்கள் செலுத்தும் எந்தவொரு வரிப் பணத்திலும் ஒரு ரூபாயைக் கூட அரசியல் அதிகாரிகள் மோசடி செய்ய மாட்டார்கள் என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். ஜனாதிபதியாக, மக்களின் வரிப் பணத்திலிருந்து எனக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சரவை முடிவுகளால் சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, அந்த சலுகைகளில் பெரும் எண்ணிக்கையை நாங்கள் விட்டுக்கொடுத்துள்ளோம் என்றார்.

உள்நாட்டு வருவாய்த் துறையின் புதிய ஒன்லைன் வரி தளத்தைத் தொடங்கி வைத்து, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, 2024–2025 மதிப்பீட்டு ஆண்டுக்கான வரி வருமானத்தைத் தாக்கல் செய்த முதல் நபரானார்.

அதிகாரப்பூர்வமாகத் திங்கட்கிழமை (02) அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் தளம்,



2024-2025 மதிப்பீட்டு ஆண்டு முதல் வரி அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான ஒரே சேனலாக செயல்படும். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் சமர்ப்பிப்பு முதல் தாக்கல் என அடையாளமாகப் பெறப்பட்டது.

# “178 மன்றங்கள் தொங்குகின்றன”

எனினும், 28 நகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன. 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்கள் களத்தில் இருந்தன, வேட்பாளர்களின் எண்ணிக்கை 75,589 ஆகும்.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பில், வெற்றியாளர்கள் 50% அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களைப் பெற்ற 161 உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள 178 உள்ளூராட்சி மன்றங்கள் தொங்கிக்கொண்டிருக்கின்றன., தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன அந்த மன்றங்களில் பெரும்பான்மையைப் பெற பாடுபடுகின்றன.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பெப்ரவரி 17 அன்று வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பின் விதிகளின் கீழ், உள்ளூராட்சி மன்றங்களின் புதிய பதவிக்காலம் 2025 ஜூன் 2 ஆம் திகதி ஆரம்பமானது.

இந்த 161 உள்ளூராட்சி அமைப்புகள் இப்போது முழுமையாக உருவாக்கப்பட்டு நிர்வாகக் கடமைகளைத் தொடங்கத் தயாராக இருப்பதாக தேர்தல் ஆணையர் ஜெனரல் சமன் ரத்நாயக்க ஞாயிற்றுக்கிழமை (01) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இதற்கிடையில், மீதமுள்ள 178 உள்ளூராட்சி அமைப்புகள் அவற்றின் கவுன்சிலர்களால் தேர்ந்தெடுக்கப்படும் வரை செயல்படாமல் இருக்கும்.

2025 உள்ளூராட்சித் தேர்தலில் NPP ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றது,

மொத்தம் 4,503,930 வாக்குகளுடன் 3,927 உள்ளூராட்சி இடங்களை வென்றது.

NPP மொத்தம் 266 உள்ளூராட்சி நிறுவனங்களை வென்றது.

# AIஐ பயன்படுத்தி தேடும் பொலிஸார்

தென் மாகாணத்தில் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களின் புகைப்படங்களை AI தொழில்நுட்பத்தை (செயற்கை நுண்ணறிவு) பயன்படுத்தி வடிவமைத்துள்ளனர்.

இந்த புகைப்படங்களில் உள்ள நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தொடர்பான விசாரணை பிரிவு 071 - 8592867 அல்லது 074 - 1357642என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் பெரும் சோகம்

# 2 யுவதிகள், 2 இளைஞர்கள் நீரில் மூழ்கி பலியாகினர்

## யுவதிகள் இருவர் பலி

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கின்ற மூன்று மாணவிகள் ஞாயிற்றுக்கிழமை(01) மதியம் ஒரு மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமுழமுனை கொட்டுக்கிணற்று பிள்ளையார் ஆலய கேணிக்குச் சென்றுள்ளனர்

மூவரும் கேணியில் இருந்தபோது இருவர் நீரில் இறங்கி இருக்க மற்றவர் புகைப்படம் எடுத்துள்ளார்.

திடீரென இருவரும் நீரில் மூழ்கிய நிலையில் மற்றைய யுவதி அவர்களைக் காப்பாற்ற முயன்று அது பயனற்றுப் போகக் குறித்த யுவதி அயலவர்களை அழைத்து அவர்களை மீட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்துள்ளனர்

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தரம் பத்தில் கல்வி கற்கின்ற 15 வயதான ச.ரஸ்மிலா மற்றும் ர.கிருசிகா ஆகிய இரு மாணவிகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்

உடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## இளைஞனும் சிறுவனும் பலி

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவில் பகுதியில் ஆலயத்திற்காகத் தாமரை இலை பறிப்பதற்காகத் தாமரைக் குளத்தில் இறங்கிய இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்

குளத்தில் ஞாயிற்றுக்கிழமை (01) மதியம் 11:30 மணியளவில் இறங்கிய இருவரும் நீரில் மூழ்கிய நிலையில், கிராம மக்களின் முயற்சியால் மீட்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போதும் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தரப்புகள் தெரிவித்துள்ளன. அளம்பில் தாமரை குளத்தில் தாமரை இலை பறிக்க சென்ற அளம்பில் வடக்கை சேர்ந்த 25 வயதுடைய இராஜசேகர் நிசாந்தன் மற்றும் பத்து வயதுடைய சிவநேசன் பிரணவன் ஆகிய இருவருமே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்

இவர்களின் உடலும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாதம் ஒருமுறை இருவரையும் பார்க்கலாம்

இருவருக்கும் சிறைச்சாலைப் பணிகள் ஒதுக்கப்படுவது இன்று பெரும்பாலும் செய்யப்படும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது விளையாட்டு உபகரணங்களை இறக்குமதி செய்ததாக எழுந்த ஊழல் வழக்கில், முன்னாள் அமைச்சர்கள் இருவருக்கு கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்றம் நீண்ட கால சிறைத்தண்டனை வியாழக்கிழமை (29) விதித்தது.

முன்னாள் விளையாட்டு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும், முன்னாள் வர்த்தக அமைச்சரும் முன்னாள் லங்கா சதோச தலைவருமான நளின் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

மஹிந்தானந்த அளுகமகேவுக்கு இரண்டு லட்சம் ரூபாய் அபராதமும், நளின் பெர்னாண்டோவுக்கு நான்கு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

நீதிபதிகள் மகேஷ் வீரமன், பிரதீப் அபேரத்ன மற்றும் அமலி ரணவேரா ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியது.

இந்த உத்தரவைப் பிறப்பித்த நீதிபதிகள் அமர்வு, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறியது.

2014 செப்டெம்பர் 1 முதல் டிசெம்பர் 31 வரை இறக்குமதி செய்யப்பட்ட 14,000 கேரம் போர்டுகள் மற்றும் 11,000 சதுரங்கப் பலகைகள் சம்பந்தப்பட்ட மோசடி கொள்முதல் ஒப்பந்தத்தை மையமாகக் கொண்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் (CIABOC) வழக்கு தொடரப்பட்டது.அரசுக்கு ஏற்பட்ட மொத்த நிதி இழப்பு ரூ. 53.1 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குற்றவாளிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் கண்டறிந்தது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகத்தால் லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 70இன் கீழ் ஆறு கடுமையான குற்றச்சாட்டுகளை உள்ளடக்கி இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்காக ஜனாதிபதி வழக்கறிஞர் அனில் சில்வாவும், மஹிந்தானந்த அளுத்கமகேவுக்காக ஜனாதிபதி வழக்கறிஞர் ஷனக ரணசிங்கவும் ஆஜரானார்கள்.

# அசோக சேபால கைது

அவர், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா தொகுதி இணை அமைப்பாளர் பதவியிலிருந்து மே. 25ஆம் திகதி இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரவியின் மேன்முறையீடு உயர்நீதிமன்றால் தள்ளுபடி

அரசியலமைப்பில் முரண்பட்ட வரையறைகள் காரணமாக ஓர் அமைச்சரவை அமைச்சரை இலஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர முடியாது என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் வாதிட்டனர். இந்த ஆட்சேபனையை உயர் நீதிமன்றம் நிராகரித்தது, மேலும் கருணாநாயக்க அந்த முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முயன்றார்.

இருப்பினும், குற்றம் சாட்டப்பட்டவர் தண்டனை பெற்ற பின்னரே மேல்முறையீடு செய்ய முடியும் என்றும் இடைக்கால உத்தரவுகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்ய முடியாது என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

முந்தைய மேல்முறையீட்டில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஒரு தரப்பாகக் குறிப்பிடத் தவறியது சட்டப்பூர்வமாகக் குறைபாடுடையது என்றும் அது குறிப்பிட்டது.

மேன்முறையீட்டை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம் ரூ.100,000 தைழக்குச் வழக்குச் செலவுகளைச் செலுத்தவும் உத்தரவிட்டது.

# இயங்காததால் இலக்கு தப்பியது

பாணந்துறை பகுதியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இரண்டு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறின் விளைவாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# கொழும்பு- பலாலிக்கு பயணிகள் விமான சேவை

இதற்காக இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பரிசோதிப்பவர்களின் மேற்பார்வையின் கீழ் விசேட கண்காணிப்பு விமான பயணத்தினை இரத்மலானை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் வரை, திங்கட்கிழமை (02) மேற்கொண்டுள்ளது.

குறித்த விமானம், யாழ்ப்பாணம் - பலாலி சர்வதேச விமான நிலையத்தை திங்கட்கிழமை (02) பிற்பகல் 1.05 மணியளவில் வந்தடைந்தது.

# “கொவிட் பரிசோதனை வேண்டும்”

மேலும், தற்சமயம் நமது நாட்டில் மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகிறது. சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவில் 180 வகையான மருந்துகளுக்கு இவ்வாறு தட்டுப்பாடு நிலவி வருகின்றன. வைத்தியசாலை கட்டமைப்பில் மேலும் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றன. இவற்றில், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், வலி நிவாரணிகள், இன்சுலின், இதய நோய் மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கும் கடுமையான பற்றாக்குறை நிலவி வருகின்றன. இவ்வாறான பின்புலத்தில், இது குறித்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எழுப்பிய கேள்விகளுக்கு இன்னும் தீர்வுகளோ பதில்களோ முன்வைக்கப்படவில்லை என்றார்.

மருத்துவமனைகளில் இந்த அறிகுறிகளைக் காண்பிப்பவர்களுக்கு கூடிய அவதானம் செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறே சின்னம்மை பரவுவதாலும் கடுமையான பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதற்குக் குறைந்த பட்சம் 6 வாரங்கள் தொடராக சிகிச்சையளிக்க வேண்டும்.

இந்த நோய் பரவுவதற்கான சாத்தியம் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவே, இதற்கும் தெளிவான திட்டமொன்று முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

# நபரை தாக்கிய இராணுவ வீரர்கள் அறுவர் கைது

புறக்கோட்டையில் அமைந்துள்ள மிதக்கும் சந்தைக்கு அருகில் வைத்து குடிபோதையில் இருந்த ஆறு இராணுவ வீரர்கள் ஒருவரை தாக்கியதையடுத்து, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருதானை காலாட்படை பிரிவைச் சேர்ந்த 29 முதல் 40 வயதுக்குட்பட்ட ஆறு இராணுவ வீரர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், தாக்கப்பட்டவர் நீர்கொழும்பைச் சேர்ந்தவர் எனவும் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### படைவிட்டோடிகள்

# 2,983 பேர் கைது

முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவையில் இருந்து தப்பியோடிய சுமார் 2,983 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2025 பெப்ரவரி 22ஆம் திகதி முதல் மே 30 வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 2,261 இராணுவ வீரர்கள், 194 கடற்படை வீரர்கள் மற்றும் 198 விமானப்படை வீரர்கள் அடங்குவர்.

மேலும், இலங்கை பொலிஸில் இருந்து தப்பியோடிய 330 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# மண்வெட்டியால் தாக்கி ஒருவர் கொலை

ஹொரணை, ரெமுன பிரதேசத்தில் உள்ள மர ஆலையொன்றில் பணியாற்றும் இரு தொழிலாளர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறில் மண்வெட்டியால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக `அங்குருவத்தொட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிப்பிட்டிய, செவனகல, லக்ஷிரிகம பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய எச்.ஏ. விமலசிறி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இருவரும் இடைவேளை அறையில் இருந்த போது, அவர்களுக்குள் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி சந்தேக நபர் மண்வெட்டியால் மற்றையவரை தாக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக, மொரன்ன, வரகா வெஹெரவைச் சேர்ந்த 52 வயதுடைய சந்தேக நபர் மண்வெட்டியுடன் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 2 மரங்களால் 2 நாட்களுக்கு பாடசாலைகளுக்கு பூட்டு

**ரஞ்சித் ராஜபக்ஷ**

ஹட்டன் வலயக் கல்வி அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஹட்டன் காசல்ரீ கார்பெக்ஸ் தமிழ் மகா வித்தியாலய கட்டிடங்கள் மீது, மரங்கள் விழும் அபாயம் காரணமாக இரண்டு நாட்களுக்கு, திங்கட்கிழமை (02), செவ்வாய்க்கிழமை (03) பாடசாலையை மூட முடிவு செய்துள்ளதாகப் பாடசாலையில் அதிபர் ஜேம்ஸ் விக்டர் தெரிவித்துள்ளர்.

முதலாம் வகுப்பு முதல் 13 வகுப்பு வரை சுமார் 358 மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் 40 பேர் கொண்ட ஆசிரியர் குழு உள்ளது.

பாடசாலைக்கு அருகில் இரண்டு பெரிய பெரிய மரங்கள் விழும் அபாயத்தில் உள்ளன என்றும், ஹட்டன் வலயக் கல்வி அலுவலகத்திற்கு இரண்டு மரங்களை வெட்டுமாறு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும், மரங்களை வெட்ட நடவடிக்கை எடுக்காததாலும், கடந்த சில நாட்களாக நிலவிய பலத்த காற்று மற்றும் மோசமான வானிலை காரணமாகவும் மரத்தின் பல கிளைகள் பாடசாலை கட்டிடங்களின் மீது விழுந்தன என்றும் அதிபர் கூறியுள்ளார்.

மத்திய மாகாண கல்வி அமைச்சு மற்றும் ஹட்டன் வலயக் கல்வி பணிப்பாளரின் முறையான அனுமதியுடன்,(02) மற்றும் (03) ஆகிய திகதிகளில் பாடசாலை மூடப்படும் என்றும் பாடசாலை கட்டிடங்களின் மீது இடிந்து விழும் அபாயத்தில் உள்ள இரண்டு பெரிய மரங்களும் (03) நாட்களில் அகற்றப்படும் என்றும் அதிபர் தெரிவித்தார்.

இந்நிலையில், பாடசாலை வளாகத்தில் உள்ள பல மரங்களை வெட்டுவதற்கு பெற்றோர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# 1,316 கிலோ கிராம் பீடி இலைகள் சிக்கின



சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சுமார் 1,316 கிலோ கிராம் பீடி இலைகளை யாழ்ப்பாணம்- புனரின், கல்முனை முனை மற்றும் சம்பகுளம் கடற்பகுதியில் வைத்து கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

வடக்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படைக் கப்பலான வேலுசுமணவுடன் இணைக்கப்பட்ட புனரின் கல்முனை முனையின் கடற்படைப் பிரிவினால், கல்முனை முனை மற்றும் சம்பக்குளத்தைச் சுற்றியுள்ள கடற்கரை மற்றும் கடல் பகுதிகளில் கடந்த 30ஆம் திகதியன்று நடத்தப்பட்ட இந்த சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது, குறித்த கடற்கரையில் காணப்பட்ட 15 சந்தேகத்திற்கிடமான பைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இதன்போது, கடத்தல்காரர்களால் கைவிடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சுமார் 1,316 கிலோ மற்றும் 400 கிராம் பீடி இலைகளைக் கடற்படை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்படும் வரை கடற்படையின் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

### வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

# கண்ணிவெடி அகற்ற ஜப்பான் ஆதரவு



இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்குத் தனது ஆதரவை வழங்குவதற்காக MAG மற்றும் HALO அறக்கட்டளையுடன் இணைந்து இந்த புதிய இரண்டு திட்டங்களுக்கும் மொத்தமாக 900,000 US$ (சுமார் ரூ.270 மில்லியன்) ஜப்பான் அரசாங்கம் வழங்கியுள்ளது.

KAMOSHIDA Naoaki Chargé d' Affaires ad interim, கண்ணிவெடி ஆலோசனைக் குழு (MAG) மற்றும் ஹாலோ அறக்கட்டளையுடன் (Halo Trust) அடிமட்ட மனித பாதுகாப்பு திட்டங்களுக்கான உதவி (GGP)" திட்டத்தின் கீழ் கண்ணிவெடி அகற்றும் இரண்டு திட்டங்களுக்கான மானிய ஒப்பந்தங்கள் மே.30 கைச்சாத்திடப்பட்டன.

2002ஆம் ஆண்டு முதல் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு ஜப்பான் நன்கொடை அளித்து வருகிறது. மேலும் ஜப்பானின் மொத்த உதவித் தொகை 47 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது.

MAG மற்றும் HALOவின் இந்தத் திட்டங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மொத்தம் 13,000 பயனாளிகளுக்கு மீள்குடியேற்றம் மற்றும் மேம்பட்ட வாழ்வாதார உதவிக்குப் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி இலங்கைக்கான ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி முன்னுரிமைப் பகுதிகளில் ஒன்றாகும்.

இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்புதல், மீள்குடியேற்றம் மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கிய ஒரு அடிப்படை படியாகக் கண்ணிவெடி அகற்றலை ஜப்பான் கருதுகிறது என்று KAMOSHIDA வலியுறுத்தினார். ஜப்பானின் தொடர்ச்சியான ஆதரவிற்கான வலுவான உறுதிப்பாட்டை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார், மேலும் 2027ஆம் ஆண்டுக்குள் இலங்கை கண்ணிவெடி பாதிப்பு இல்லாத நாடாக மாறும் என்றும், இது நீடித்த அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு வழி வகுக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

MAGஇன் இயக்குநர் ஜீனத் கரேவால் கூறுகையில்,

"இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் பொதுமக்களின் வாழ்க்கையில் கண்ணிவெடி அகற்றுதல் மற்றும் நில விடுவிப்பு நேரடி தாக்கங்களை ஏற்படுத்துகிறது. மாசுபட்ட நிலங்களை அகற்றுவது கிராமங்களில் விவசாயம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு உதவுவதோடு கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிமருந்துகளின் அச்சுறுத்தலிலிருந்து பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறது. இந்த முயற்சிகள் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துகின்றன, செழிப்பு மற்றும் பாதுகாப்பான தேசத்தை நோக்கிய பாதையை அமைக்கின்றன.

ஜனவரி 2025 நிலைவரப்படி, MAG மொத்தம் 100,930,005 நிலத்தை விடுவித்துள்ளது மற்றும் 2002 முதல் 103,467க்கும் மேற்பட்ட வெடிக்கும் போர் எச்சங்களை அகற்றியுள்ளது. பல தசாப்தங்களாக ஆயுத மோதல்களால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆள் எதிர்ப்பு கண்ணிவெடிகள் மற்றும் பிற ஆபத்தான மாசுபாடுகளை அகற்றுவதற்கு ஜப்பான் தூதரகம் மற்றும் மக்கள் அளித்த தொடர்ச்சியான ஆதரவுக்கு MAG தனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

"உயிர்களைக் காப்பாற்றுங்கள், எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்" என்ற எங்கள் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக, MAG தூதரகம் மற்றும் ஜப்பான் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறது, மேலும் கண்ணிவெடி இல்லாத இலங்கையை உருவாக்குவதற்கான எங்கள் இலக்கை அடைய அவர்களின் தொடர்ச்சியான ஆதரவையும் உதவியையும் எதிர்நோக்குகிறது."

HALOவின் துணைத் திட்ட மேலாளர் ஹன்னா எலிசபெத் பிக்டன் கூறுகையில்,

"கடந்த 22 ஆண்டுகளில், ஜப்பான் HALOவின் மிகவும் நிலையான ஆதரவாளராக இருந்து வருகிறது. இக்காலத்தில், HALO கிட்டத்தட்ட 300,000 ஆள் எதிர்ப்பு கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்து அழித்துள்ளது மற்றும் முன்னர் மாசுபட்ட 120 நிலத்தை விடுவித்துள்ளது. இது கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 150,300 நபர்களின் மீள்குடியேற்றத்திற்குப் பங்களித்துள்ளது, நிலையான வாழ்வாதாரத்தை மீட்டெடுத்துள்ளது மற்றும் சமூக மறுகட்டமைப்பு மற்றும் நிலைப்படுத்தலை செயல்படுத்துகிறது. இது உள்ளூர் ஆண்களும் பெண்களும் மிகவும் மதிக்கப்படும் தொழிலில் பங்கேற்கவும், அவர்களின் குடும்பங்களுக்கு நிலையான வருமானத்தை வழங்கவும் உதவியுள்ளது.

ஜப்பானின் ஆதரவுடன், மீதமுள்ள மாசுபாட்டைக் கண்டறிந்து அகற்றுவதில் HALO செயல்பட்டு வருகிறது, அதே நேரத்தில் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தை (NMAC) தேசிய நிறைவு செயல்முறையை செயல்படுத்துவதில் ஆதரிக்கிறது.

கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுக்கு இந்த உதவி, இலங்கை அரசாங்கத்தை அதன் அனைத்து அறியப்பட்ட கண்ணிவெடி மற்றும் பிற வெடிக்கும் மாசுபாடுகளிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கும் அதன் ஆள் எதிர்ப்பு கண்ணிவெடி தடை ஒப்பந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கும் மிகவும் முக்கியமானது."

# துசிதவின் விளக்கமறியல் நீடிப்பு



தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவை விளக்கமறியல் உத்தரவு நாளை புதன்கிழமை (04) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றத்தால் திங்கட்கிழமை (02) அன்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் துசித ஹல்லொலுவ, கடந்த மே மாதம் 30ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட நிலையில், நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

கிழக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக திங்கட்கிழமை (02) அன்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போட்டி பரீட்சை நியமனம் வழங்க கோரியும், கிழக்கு மாகாண பட்டதாரிகள் அரச நியமனங்களில் புறக்கணிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது, "பேச்சுவார்த்தை போதும் தொழிலை தா"?, "அரச சேவையில் கிழக்கு மாகாணத்தைப் புறக்கணிப்பது ஏன்"?,

"பரீட்சை வேண்டாம் தகுதிகான் அடிப்படையில் வேலை" போன்ற பல வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.









# பேரவை-கூட்டணி இடையில் ஒப்பந்தம்



**நிதர்ஷன் வினோத்**

தமிழ்த் தேசிய பேரவை மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய தரப்புக்களிடையே கொள்கை ரீதியான இணக்கத்தை ஏற்படுத்தும் ஒப்பந்தமொன்று திங்கட்கிழமை (02) அன்று கைச்சாத்திடப்பட்டது.

யாழ்ப்பாண நகரில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற நிகழ்வில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தமிழ்த் தேசிய பேரவையின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பில் அதன் செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கமும் கையொப்பமிட்டனர்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் தமிழ்த் தேசிய பேரவையின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், ந.சிறீகாந்தா, பொ.ஐங்கரநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம், ஈ.சரவணபவன், க.அருந்தவபாலன், க.நாவலனும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம், சுரேஸ் பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார், நாகலிங்கம் இரட்ணலிங்கம், பா.கஜதீபன், க.சர்வேஸ்வரா உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தனர்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில், வடக்கில் பெரும்பாலான சபைகளில் ஆட்சி அமைப்பதில் தமிழ் கட்சிகளிடையே இழுபறி நிலை காணப்பட்டது.

தமிழ்த் தேசிய பேரவை, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய தரப்புக்களிடையே தொடர்ச்சியாக நடைபெற்ற சந்திப்புக்களைத் தொடர்ந்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

# மஸ்கெலியா நோக்கி பயணித்த பஸ் விபத்து

**எம்.கிருஷ்ணா**

கொழும்பிலிருந்து மஸ்கெலியா நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபை அவிசாவளை டிப்போவிற்கு சொந்தமான பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து நோட்டன் பிரிட்ஜ் தியகல வீதியில் செவ்வாய்க்கிழமை(02)காலை இடம்பெற்றுள்ளது.

திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு விபத்துக்கான காரணம் என நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# அழகான இடங்களின் ஆபத்துகளைப் பற்றி சிந்திப்பதில்லை

இந்த நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 800 பேர் நீரில் மூழ்கி இறப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த கடுமையான ஆபத்தைப் பொதுமக்கள் கவனிக்காதது ஒரு பிரச்சினை. இதனால் பெறுமதியான உயிர்கள் அநியாயமாக இழக்கப்படுகின்றன. இதில், இளம் வயதில் இடம்பெறும் சம்பவங்கள் என்றைக்குமே மறக்க முடியாதவையாகவே உள்ளன.

பல்வேறு பகுதிகளில் உள்ள அழகான இடங்களின் புகைப்படங்கள் மற்றும் விளக்கங்கள் பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களில் வெளியிடப்படுவதை காணலாம். அவற்றைப் பார்க்கும் பலர் அந்த இடங்களின் அழகைக் காண முயற்சிக்கின்றனர். வேடிக்கைக்காக இதுபோன்ற தெரியாத இடங்களுக்குச் செல்லும் பலர் அந்த இடங்களின் ஆபத்துகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. இதன் விளைவாக, பல விடுமுறை நாட்கள் கொண்ட நீண்ட வார இறுதி நாட்களில் விபத்துகளும் மரணங்களும் சோகமான செய்திகளாகின்றன.

இலங்கையில் நீரில் மூழ்கி இறப்பவர்களில் பெரும்பாலோர் 21 முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், உலகளவில், நீரில் மூழ்கி இறப்பவர்களில் அதிக எண்ணிக்கை 1 முதல் 4 வயதுக்குட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரணத்திற்கு நீரில் மூழ்குவதே முக்கிய காரணம் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

2025 ஜூன் 1ஆம் திகதியன்று முல்லைத்தீவில் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில், இரண்டு சிறுமிகளும், இளைஞன், சிறுவன் என நால்வர் உயிரிழந்த சோகமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதில், தாமரைக் குளத்தில் தாமரை இலை பறிக்கச் சென்ற அளம்பில் வடக்கைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனும் 10 வயதான சிறுவனும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், முல்லைத்தீவு குமுழமுனை கொட்டுக்கிணற்று பிள்ளையார் ஆலய கேணிக்குச் சென்றிருந்த நிலையில், நீரில் இறங்கி செல்ஃபி எடுத்தபோது, 15 வயதான சிறுமிகள் இருவர் நீரில் மூழ்கி, மரணமடைந்துள்ளனர்.

“இணையத்தில் அழகான இடங்களின் பல தகவல் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மக்கள் அத்தகைய இடங்களுக்குச் செல்கிறார்கள். அவர்கள் சென்று வேடிக்கை பார்க்கிறார்கள். அவர்கள் ஒரு புதிய சூழலுக்கு, தெரியாத இடத்திற்குச் செல்லும்போது,எப்போதும் ஓர் ஆபத்து இருக்கிறது. ஆனால், நாம் ஆபத்தைப் பற்றி யோசிப்பதில்லை. அத்தகைய இடத்திற்குச் செல்லும்போது உடல் ரீதியாக தயாராக இருப்பது முக்கியம்.”

“நமது நாட்டில் நீரில் மூழ்குவதற்கான காரணங்களில் மது அருந்துதல், பாதுகாப்பு அங்கி அல்லது உபகரணங்களைப் பயன்படுத்தாமல் இருத்தல் மற்றும் பாதுகாப்பற்ற செயல்கள் ஆகியவை அடங்கும். செல்ஃபி எடுப்பதும் ஓர் ஆபத்து. சிலர் மது அருந்திவிட்டு நீர்வீழ்ச்சிகள், ஏரிகள் அல்லது கடலில் நீந்தச் செல்கிறார்கள். இது மிகவும் ஆபத்தானது. போதை காரணமாக, தண்ணீர் நிரம்பி இல்லாத இடத்தில் கூட, அவர்கள் தண்ணீரில் விழுந்து மூழ்கி இறக்க நேரிடும்.

விடுமுறை நாட்களில் குடும்பத்துடன் அல்லது நண்பர்களுடன் நீர்நிலைகளுக்குச் செல்லும்போது அங்கு வைக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை விளம்பரங்களைப் பார்வையிட்டு, அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களை பின்பற்றவேண்டும். இவற்றையெல்லாம் விட, விடுமுறைகளை நீர்நிலைகளில் கழிப்பதைத் தவிர்ப்பதே சிறந்ததாகும் என்பதே எமது அவதானிப்பு.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எந்தவொரு தனி மனிதனையோ அணியினரையோ குழுவினரையோ, துன்புறுத்துவதற்கு உட்படுத்துவதோ விலக்கிவைப்பதோ தீமைகளையே உருவாக்கும். யாவரையும் முழுமையாக ஏற்றுக்கொள்வேன் எனும் திட சங்கற்பத்துடன், இறைவனுக்கு வாக்குறுதி அளிப்பீர்களாக! இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும். இறைவனுக்கு வாக்குறுதி அளிப்பீர்களாக! இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும்.

இந்தப் பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும், இந்தப் பிரகடனத்தைக் கடவுள் முன் ஒப்படைத்து, அதன்படி ஒழுகினால், அதன் பெறுபேற்றை மக்கள் உடன் அறிந்து தெளிவார்கள். இதை நீங்கள் சத்தியப் பிரகடனமாக மனத்துக்குள் நிறுத்த வேண்டும்.

உலகத்தில் பாவங்கள் மிகவும் உக்கிரமாகக் கூடிக்கொண்டு வருகின்றன. இந்த நிலைமையைச் சரிசெய்வது எப்படி? ஒவ்வொரு பிரஜையும் தன்னைத்தான் உணர்ந்தும் உலக மாற்றங்களையும் துன்பங்களையும் மனமாறத் தெரிந்துகொண்டால், கெட்ட குணங்கள் எரிந்து அழிந்து விடும்.

மீண்டும் புதியதொரு களிப்பு மிக்க மக்கள் கூட்டத்துடன் மிடுக்கு, நேர்மை மிகுந்து உறுதியுடன் அவதாரம் எடுக்கும் யுகங்கள் தோறும், போரும் அழிவும் நடந்த வண்ணமே உள்ளன. இந்நிலை தொடராமல் இருக்க, சத்திய புருஷர்களாக உருவாகியே தீரவேண்டும்.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

முஸ்லிம் அரசியல்வாதிகள்

# மந்திரத்தால் மாங்காய் விழுமென வாழாவிருக்கின்றார்களா?

மொஹமட் பாதுஷா

ஏதோ முஸ்லிம் சமூகத்திற்கு இப்போது எந்தவிதமான குறுங்கால மற்றும் நீண்டகால பிரச்சினைகளும் இல்லை என்பது போலவும், நாட்டில் எதிர்கொள்ளும் வாழ்வாதார நெருக்கடிகளையே முஸ்லிம்களும் எதிர்கொண்டுள்ளார்கள் என்பது போலவும்தான் முஸ்லிம் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

ஆனால், உண்மையில் முஸ்லிம்களுக்கு இலட்சக்கணக்கான ஏக்கர் காணிப் பிரச்சினைகள் உள்ளன. அரச உயர் பதவி மற்றும் வளப் பங்கீட்டில் பாகுபாடு உள்ளது, மாற்றாந்தாய் மனப்பாங்கு தொடர்கின்றது. முஸ்லிம்களுக்கு எதிரான கொலைகள், உரிமை மீறல்களுக்கு நீதி கிடைக்கவில்லை. ஆனால் இதுபற்றி பேசுவதற்குத்தான் யாரையும் காணவில்லை.

வட மாகாணத்தில் 5940 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்காக மூன்று மாத கால அவகாசத்துடன் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறும் முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கின்றது. தமிழ் அரசியல்வாதிகளின் தொடரானதும் கடுமையானதுமான அழுத்தமே இதற்குக் காரணமாகும்.

அப்படியென்றால், முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை விவகாரத்திலோ அல்லது ஏனைய குறுங்கால நீண்டகால பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலோ முஸ்லிம் தலைவர்கள், கட்சிகள் மற்றும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் எம்.பிக்களால் ஏன் இவ்வளவு காலமும் இவ்வாறான நகர்வுகளைச் செய்ய இயலாமல் போயிருக்கின்றது?

முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக உயிரையும் துச்சமென மதிப்போம் என்று கூறிய முஸ்லிம் கட்சிகள் சார் எம்.பிக்கள் ஏன் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்காக கூட்டிணைந்து குரலையாவது கொடுக்கவில்லை என்பது முக்கியமான கேள்வி.

முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுண, எஸ்.ஜே.பி. தொடக்கம் ஆளும் தேசிய மக்கள் சக்தி வரை எந்தக் கட்சியும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் காலத்தைக் கடத்தின, கடத்திக் கொண்டிருக்கின்றன என்பதுதான் உண்மையாகும்.

தேர்தல் வந்தால் அல்லது உள்ளூராட்சி சபையில், மாகாண சபையில் ஆட்சியமைக்க வேண்டும் என்றால், முஸ்லிம் கட்சிகள், தலைவர்கள் இணைவது பற்றிய கதைகள் உலாவரத் தொடங்குகின்றன. ஆனால், சமூக விடயத்தில் ஏன் இந்த எண்ணம் ஏற்படுவதில்லை.

முஸ்லிம் கட்சிகளில் அரசியல் செய்த முன்னாள் எம்.பிக்கள் மற்றும் இப்போதைய எம்.பிக்கள் மட்டுமன்றி, என்.பி.பி., எஸ்.ஜே.பி. போன்ற கட்சிகள் ஊடாக பாராளுமன்றத்திற்குத் தெரிவான முஸ்லிம்களும் கூட தங்களை அரசியல் ‘மேதைகள்’, ‘ஞானிகள்’ என்றே நினைத்துக் கொண்டு இருக்கின்றனர்.

ஆனால், சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற விடயத்தில் ‘அந்த ஞானம்’ வெளிப்படுவதே இல்லை. நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு முஸ்லிம் கட்சிகளின் எம்.பி.க்கள் குரல் கொடுப்பதில்லை என்பது ஒருபுறமிருக்க முஸ்லிம் ஒருவரை அமைச்சராக நியமிக்காமை ஒருவித பாகுபாடு எனக் கருதி. அதற்காகக் குரல் எழுப்பத் திராணியற்றவர்களாகவே ஆளும் தரப்பின் முஸ்லிம் எம்.பிக்கள் உள்ளனர் எனலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது சீர்குலைந்து விட்டது. பல தமிழ்க் கட்சிகள் குழுக்கள் உருவாகியிருக்கின்றன. இவற்றுள் சில அணிகள் ஒரு காலத்தில் ஆயுத இயக்கங்களாக அறியப்பட்டவையாகும். அக் குழுக்கள் தொடர்பாக மக்களுக்கு குறிப்பாக, முஸ்லிம்களுக்குப் பல கசப்பான அனுபவங்கள் உள்ளன என்பது வேறு கதை.

ஆனால். இவையெல்லாம் இன்று தமிழ் மக்களுக்கான அரசியல் நீரோட்டத்தில் இணைந்துள்ளன.

பதில் தலைவர், செயலாளருடன் தமிழரசுக் கட்சி செயற்பட்டாலும் தமது இலக்கை தவறவிடவில்லை. எல்லா தமிழ்க் கட்சிகளும் வெவ்வேறு வழித்தடங்களில் ஒரே இலக்கை நோக்கிப் பயணிப்பதையும், ஒரே விடயத்தையே வெவ்வேறு அணுகுமுறையில் வலியுறுத்துவதையும் காண முடியும்.

தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை என்றாலும், இந்த ஒருங்கிணைந்த செயற்பாடு நிறையப் பலன்களை அவர்களுக்குக் கொண்டு வந்திருக்கின்றது. ஆளுக்கொரு கோணத்தில் பயணித்தாலும் சமூகம் என்று வருகின்ற போது அவர்கள் ஒரு பொதுவிடத்தில் ஒன்று கூடுகின்றார்கள் என்பது கவனிப்பிற்குரியது.

ஆயினும், இதனை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு, முஸ்லிம்களின் விவகாரங்களை, பிரச்சினைகளைக் கையாள்வதற்கும், ஒன்றிணைந்த (கூட்டு) பலத்தின் ஊடாக அவற்றை வெற்றி கொள்வதற்கும் ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரியது.

அப்படியென்றால், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை ஒன்றுதிரட்டி அதிகாரத்தில் உள்ள, அதிகாரத்தில் இல்லாத, முஸ்லிம் தலைவர்கள். எம்.பிக்கள் எல்லோரும் இணைந்து குரல்கொடுப்பதற்கான ஏற்பாட்டை எங்கிருந்து செய்வது? பூனைக்கு மணி கட்டுவது யார்?

முஸ்லிம் கட்சிகள் தம்முடைய சொந்த சமூகத்திற்காகக் குரல் கொடுக்கும் போக்கினை, காலவோட்டத்தில் இணக்க அரசியல் என்ற பெயரில் பெருந்தேசியக் கட்சிகள் மழுங்கடிக்கச் செய்துள்ளன. பெரும்பான்மைக் கட்சிகளில் இலங்கையர் என்ற பொதுமைப்படுத்தலின் கீழ் செயற்பட்டு வருகின்ற முஸ்லிம் எம்.பிக்களுக்கும் வாய்ப்பூட்டு போடப்பட்டுள்ளது.

மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆரம்பித்து வைத்த பேரம் பேசும் அரசியலானது அவரது மரணத்தின் பின்னர் பதவிகளுக்காக, பணத்திற்காக சோரம் போகும் அரசியலாக எப்போது மாறத் தொடங்கியதோ அப்போதே முஸ்லிம்களின் அபிரலாஷைகளும் பிரச்சினைகளும் குப்பைத் தொட்டிக்குள் சென்று விட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

கடந்த 25 வருடங்களாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக இருக்கின்ற றவூப் ஹக்கீம், அதன் பின்னர் ‘காங்கிரஸ்களை’ உருவாக்கிய றிசாட், அதாவுல்லா உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் தனித்துவமான முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்ன செய்திருக்கின்றார்கள் என்பதை மீள் வாசிப்புச் செய்ய வேண்டும்.

கடந்த 30 ஆண்டுகளில் எல்லா கட்சிகளிலும் குறிப்பாக முஸ்லிம் கட்சிகள் ஊடாக மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, முதலமைச்சராக, மாகாண சபை உறுப்பினராக அதிகாரங்களைச் சுகித்தவர்கள் எத்தனை ஆயிரம் ஏக்கர் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார்கள் என்பதைச் சொல்ல வேண்டும்.

வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ஏக்கர் காணிகளின் பிரச்சினைகள் உள்ளன. வடக்கில் ஒருவிதமாகவும் கிழக்கில் வேறு விதமாகவும் இப் பிரச்சினை உள்ளது. அரச நிறுவனங்கள், படைத்தரப்பு மற்றும் தனிநபர்களின் நடவடிக்கைகளின் காரணமாக முஸ்லிம்கள் தங்களது நிலங்களை உரிமை கொண்டாட முடியாத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக, கிழக்கைப் பொறுத்தவரையில், இன விகிதாசாரத்திற்கு ஏற்ப காணிகள் இல்லை என்பதுதான் மிகப் பெரிய குறைபாடாகும். இது அடுத்தடுத்த தலைமுறைக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பாரிய விவகாரம் என்பதை அரசியல்வாதிகளும் மறந்து விட்டார்கள் மக்களும் மறந்து விட்டார்கள்.

காணிப் பற்றாக்குறை இருப்பது ஒருபுறமிருக்க நாற்பது வருடங்களாகத் தீர்க்கப்படாத காணிப் பிரச்சினைகள் உள்ளன. எல்லா முஸ்லிம் தலைவர்களும் எம்.பிக்களும் தேர்தல் காலத்தில் இவற்றைப் பேசுகின்ற போதிலும் கூட, பிறகு மறந்து விடுகின்றனர். பெருந்தேசியக் கட்சிகளுடன் இணைந்துள்ள சில சிறுபிள்ளைத்தனமான அரசியல்வாதிகள் இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விட்ட சம்பவங்களும் உள்ளன.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்னரும், தமிழ் மக்கள் தமது போராட்டத்தைக் கைவிடவில்லை. குறிப்பாக, காணிக்காகத் தமிழ் மக்கள் தொடராகக் குரல்கொடுத்து வருகின்றனர். மக்கள் மாதக்கணக்காகப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். சமகாலத்தில் தமிழ் எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் பேசுகின்றனர்.

உதாரணமாக, 5940 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் வர்த்தமானி வெளியான பிறகு தமிழ் எம்.பிக்கள் நேரடியாக அரசிற்கு அழுத்தம் கொடுத்தனர். வெளிநாட்டு இராஜதந்திரிகளை அணுகி உதவி கோரினர்.

அதுமட்டுமன்றி, “இதனை வாபஸ் பெறவில்லை என்றால், மே 28ஆம் திகதி போராட்டம் வெடிக்கும்” என்று பகிரங்கமாகவே அறிவித்தனர். விளைவு, அரசாங்கம் அடிபணிந்தது! இதனை வாபஸ் பெறுவதற்கான வழிவகைகளை இப்போது அரசு தேடி வருவதாகக் கூறப்படுகின்றது.

இப்படியான ஒரு ஒன்றிணைந்த இயக்கப்பாடு முஸ்லிம் மக்களிடமும் இல்லை. அரசியல்வாதிகளிடமும் இல்லை. காணி விவகாரத்தில் மட்டுமன்றி, 99 சதவீதமான ஏனைய சமூகப் பிரச்சினைகளில் கூட ஒரு புள்ளியில் சந்தித்து, ஒருமித்துச் செயற்பட்டு, கூட்டுப் பலத்தின் மூலம் சமூகப் பிரச்சினைகளை வெல்வதற்கு எந்தப் பிரயத்தனங்களையும் முஸ்லிம் சமூகம் செய்யவில்லை.

இலங்கையில் நடுநிலையான ஒரு அரசாங்கம் வந்து, அவர்களாக வீடு தேடிவந்து முஸ்லிம்களின் பிரச்சினைகளை அறிந்து, அவற்றை அவர்களாகவே தீர்த்து வைக்கும் ஒரு நாள் வரும் என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்களா?

மந்திரத்தால், மாயா ஜாலத்தால் மாங்காய் விழும் என்று கண்மூடித்தனமாக, நம்பிக் கொண்டு, இன்னும் எத்தனை வருடங்களுக்கு முஸ்லிம் சமூகம் வாழாவிருக்கப் போகின்றது?

## கடிதங்கள்

### பயிர் நிலங்களுக்கு நடுவே குப்பைத்திடல்

கட்டைபறிச்சான் தெற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள கணேசபுரம் கிராமத்தில் கட்டைபறிச்சான் - பள்ளிக்குடியிருப்பு பிரதான வீதியோரமாக மூதூர் பிரதேச சபையால் கொட்டப்பட்ட குப்பை திடல் காணப்படுகின்றது.

இதனால் குறித்த பிரதேசம் கொலைக்களமாக மாறிவரும் பிரதேசமாகக் காணப்படுவதாக அப்பகுதியிலுள்ள மக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்நிலையில் கடந்த இரு ஆண்டுகளில் திறந்த வழிகளில் கொட்டப்படும் குப்பைகளை உட்கொண்ட 37 பசு மாடுகள் மரணித்துள்ளதாகவும், பகல் இரவு எந்த நேரமும் ஆபத்தான காட்டு விலங்குகளின் நடமாட்டம் காணப்படுவதால் அச்சம் நிறைந்த வாழ்வியலை அனைவரும் அனுபவித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கொலைக்களமாக மாறிவரும் மூதூர் பிரதேச சபையின் குப்பை திடல் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளதுடன் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எப்.முபாரக்





# ‘ஜெயிலர் 2’ கலகல..!

‘ஜெயிலர்’ முதல் பாகத்தில், யோகி பாபு என்னை வச்சு செய்து விட்டார். அதற்குப் பதிலடியாக, இரண்டாம் பாகத்தில் நான் அவரை வச்சு செய்ய வேண்டும் என நெல்சன் இடம் ரஜினிகாந்த் கலகலப்பாக கூறியதாக, யோகி பாபு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

நெல்சன் இயக்கத்தில், ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் ‘ஜெயிலர் 2’ படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், முதல் பாகத்தில் நடித்த பல நட்சத்திரங்கள் இரண்டாம் பாகத்திலும் நடித்து வருகின்றனர்.

அந்த வகையில், முதல் பாகத்தில் கார் சாரதியாக நடித்த யோகி பாபு, இரண்டாம் பாகத்திலும் ஒரு முக்கிய கேரக்டரில் நடிக்கும் நிலையில், அண்மையில் ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது, “இந்த காலத்தில் சிறந்த நகைச்சுவை உணர்வு மிக்க இயக்குநர் என்றால் நெல்சனை தான் நான் சொல்வேன். படப்பிடிப்பின் போது ரஜினி சார் ரொம்பவே உற்சாகமாக இருக்கிறார்.

ரஜினி சார், நெல்சன் இடம் ‘யோகி பாபுவை விடக்கூடாது. முதல் பாகத்தில் என்னை வச்சு செஞ்சிருக்கார். அதனால, இந்த பாகத்தில் அவரை நான் வச்சு செய்வேன்’ என்று நகைச்சுவையாக சொல்லியிருக்கிறார்” என்றார்.



# தனுஷ் பதிலடி

முன்னணி நடிகரான தனுஷ், தற்போது இயக்குநர் சேகர் கம்முலா இயக்கத்தில் ‘குபேரா’ படத்தில் நடித்துள்ளார். இதில் நாகார்ஜுனா, ராஷ்மிகா மந்தனா ஜிம் சரப் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் உருவாகியுள்ள இப்படம் வருகிற ஜூன் 20ஆம் திகதி வெளியாகயுள்ளது.

இந்த நிலையில், இப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய நடிகர் தனுஷ் தன்னை பற்றி வதந்தி பரப்புபவர்களுக்குப் பதிலடி கொடுத்து இருக்கிறார்.

அதாவது, நீங்கள் எனக்கு எதிராக எவ்வளவு வேணாலும் வதந்திகள் பரப்பலாம். எதிர்மறையான விடயங்களைக் கிளப்பலாம். ஒவ்வொரு படமும் ரிலீஸ் ஆகும் ஒன்றரை மாதம் முன்பு என்னைப்பற்றி நெகட்டிவிட்டி பரப்புங்க. இங்க இருக்குறவங்க என் ரசிகர்கள் கிடையாது, 23 வருஷமா என் கூடவே வந்த வழித்துணைகள். நீங்க சும்மா ஒரு 4 வதந்தியைப் பரப்பி என்னை காலி பண்ணிடனும்னு நெனச்சா அதை விட முட்டாள்தனம் எதுவுமே கிடையாது. ஒரு செங்கலை கூட ஆட்ட முடியாது” என்று ஆவேசமாகப் பேசியுள்ளார்.



# மாரடைப்பால் இயக்குநர் மரணம்

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியைச் சேர்ந்தவர் விக்ரம் சுகுமாரன். இவர் மறைந்த இயக்குநர் பாலு மகேந்திராவிடம் உதவி இயக்குநராக பணிபுரிந்தார். கடந்த 1999 முதல் 2000 வரை வெளியான ‘கதை நேரம்’ மற்றும் 56 குறும்படங்கள், ‘ஜூலி கணபதி’ திரைப்படம் போன்றவற்றில் பாலு மகேந்திராவிடம் பணிபுரிந்தார்.

கடந்த 2013ம் கதிர், ஓவியா நடிப்பில் வெளியான மதயானைக் கூட்டம் படத்தின் முலம் விக்ரம் சுகுமாரன் இயக்குநராக அறிமுகமானார். இப்படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. பின்னர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு கடந்த 2023ம் ஆண்டு தன் இரண்டாவது படமான ‘ராவண கோட்டம்’ படத்தை இயக்கினார்.

மேலும் இவர் ‘பொல்லாதவன்’, ‘கொடிவீரன்’ ஆகிய திரைப்படங்களில் நடித்துள்ளார். இதில் சாந்தனு ஹீரோவாக நடித்திருந்தார். இப்படத்தில் சமூகத்தில் நிலவும் சாதி மற்றும் அரசியல் பிரச்சனைகளை எடுத்துரைத்துப் பேசப்பட்டது.

இந்த நிலையில், இயக்குநர் விக்ரம் சுகுமாரன் நேற்று முன்தினம் (ஜூன் 1) இரவு மாரடைப்பால் காலமானார். மதுரையில் ஒரு தயாரிப்பாளரிடம் கதை சொல்லிவிட்டு, இரவு சென்னைக்குப் பேருந்து ஏறும் போது அவருக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது.

உடனடியாக அவர் அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் அங்கு காலமானார். அவரது உடல் தற்போது சென்னைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அவரது மறைவுக்குப் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# கமல்ஹாசன் மன்னிப்பு கேட்க வேண்டும்

நடிகர் கமல்ஹாசன் இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் ‘தக் லைப்’ என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். அந்த திரைப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது.

இதில் கலந்து கொண்ட நடிகர் கமல்ஹாசன் கன்னட மொழி குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக வெளியான வீடியோ சமூக வலைத்தளங்களில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கமல்ஹாசன் பேச்சுக்கு கர்நாடகத்தில் பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். இந்த நிலையில் இதுபற்றி நடிகை சுதாராணி பெங்களூருவில் பேட்டி அளித்தார்.

அப்போது அவர், ‘நம்ம கர்நாடகா, கன்னட மொழி குறித்து யாரேனும் தவறாகப் பேசினால் அதை ஒப்புக்கொள்ள முடியாது. அந்த சமயத்தில் நாம் அனைவரும் ஒன்றாக



இருந்து கண்டிக்க வேண்டும். கன்னட மொழி குறித்து ஆதாரம் இருந்தால் அதைக் காண்பித்து அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். நம்ம நாடு, மொழி குறித்து இதுபோல் பேசுவது தவறு. இதற்கு நடிகர் கமல்ஹாசன் மன்னிப்பு கேட்க வேண்டும்’ என்று தெரிவித்துள்ளார்.



# ஓடோடி வருவேன்

‘குபேரா’ இசை வெளியீட்டு விழா விழாவில் கலந்து கொண்ட ராஷ்மிகா மந்தனா, “தமிழில் நல்ல கதை கிடைத்தால் ஓடோடி வந்து இருக்கிறேன்” என செய்தியாளர்களிடம் கூறி உள்ளார்.

“நீங்க எல்லோரும் ரொம்ப ஆதரவு கொடுத்துட்டு இருக்கீங்க. தமிழ் படங்களில் அதிகம் பார்க்க முடியவில்லை என்று கேட்கிறீர்கள். நானும் காத்துக்கொண்டுதான் இருக்கிறேன். தமிழில் நல்ல கதை கிடைத்ததால் ஓடோடி வந்து இருக்கிறேன். கதாநாயாகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் நடிக்க விருப்பம் உள்ளதா என்று கேட்கிறீர்கள். எனக்கு கதைதான் முக்கியம். நல்ல கதை இருந்தால் நடிப்பேன். எனக்கு தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மொழி வித்தியாசம் கிடையாது. அதுபோல, பான் இந்தியா, ரீஜினல் என வித்தியாசம் பார்க்கமாட்டேன். கதை நன்றாக இருந்தால் நடிப்பேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



# தமிழ் இசைத்துறையில் மறுமலர்ச்சி





இலங்கையின் தமிழ் இசைத்துறையில் புரட்சிகரமான பங்களிப்பை செய்து வரும் சக்தி டீவி, பலராலும் பாராட்டப்பட்ட சக்தி க்ரௌன் (SHAKTHI CROWN) இசைத் திறமைத்தேடல் நிகழ்ச்சியின் ‘இரண்டாவது சீசனை’ மிகப் பிரமாண்டமாக ஆரம்பிக்கிறது.

முதலாவது சீசன் வெற்றிகரமாக நடைபெற்று நம் நாட்டவரின் கவனத்தை ஈர்த்ததைப் போன்று, இரண்டாவது சீசன் மேலும் வலிமை பெற்று, மிகப்பெரிய அளவில் உலகளாவிய பரிமாணத்தில் அரங்கேற உள்ளது.

25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தமிழ் இசைத் துறையில் முதன்மையான பங்களிப்பை வழங்கியுள்ள சக்தி டீவி, ‘பாட்டு பாடவா’, ‘இளைய கானம்’, ‘சக்தி ரேடியோ சூப்பர் ஸ்டார்’, ‘இசை இளவரசர்கள்’, ‘இசை மகா யுத்தம்’ போன்ற திறமைத் தேடல் நிகழ்ச்சிகளின் மூலமாக பல இளைஞர்களின் இசை கனவுகளை நனவாக்கியது. அந்த வரிசையில் உருவான மிக முக்கியமான பலவகைமையாகப்பட்ட நிகழ்ச்சியாக சக்தி க்ரௌன் பார்க்கப்படுகிறது.

முதலாம் சீசனில் இந்த நிகழ்ச்சியின் மிக முக்கிய அம்சம் இசை வழிகாட்டிகள் (Mentor) அறிமுகப்படுத்தப்பட்டமை காணப்பட்டது. தற்போது இரண்டாம் சீசன் லும் இந்த முறையைப் பயன்படுத்தி போட்டியாளர்களை செதுக்கும் திட்டத்தைச் சக்தி டீவி தொடர்கிறது. இசைத் திறமையை மேம்படுத்தும் வகையில் நேரடி வழிகாட்டல்களை வழங்கும் நிபுணர்கள், போட்டியாளர்களின் கலைத் தரத்தையும், மேடை அனுபவத்தையும் மேம்படுத்துகின்றனர்.

இம்முறை போட்டியாளர்களின் இசைப் பயணத்தை வழிநடத்த இலங்கையின் மூன்று இளம் திறமைமிக்க இசைக்கலைஞர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். பிரகாஷ் கே, ஷமீல், மற்றும் மிர்துஷா ஆகியோர் இசைய ஆழமாகப் புரிந்துகொள்வதோடு மட்டுமல்லாது ஆர்வத்துடனும், புதுமைகளுடனும் தங்கள் அனுபவத்தையும் ஆற்றலையும் கொண்டு இளைஞர்களின் கலைத்திறனை உச்சத்துக்கு அழைத்துச் செல்லவிருக்கின்றனர்.



சக்தி க்ரௌன்-சீசன் 2 உலகளாவிய கட்டமைப்பில் 144 போட்டியாளர்களுடன், ஆறுமாதங்களாக நீடிக்கும் போட்டியாக நடைபெறவிருக்கிறது. இத்தனை விரிவான மற்றும் பன்முகத்தன்மையுடைய போட்டி, தமிழ் தொலைக்காட்சித் துறையின் மிகப் பெரிய இசைப் போட்டிகளில் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது.



சக்தி க்ரௌன்-சீசன் 2 நிகழ்ச்சியின் ஆரம்பக் கட்ட படப்பிடிப்பு மே 29ஆம் திகதி Stein Studios இரத்மலானையில் மாபெரும் நிகழ்வாக நடைபெற்றது. நிகழ்ச்சியினை நேயர்கள் ஜூன் 7ஆம் திகதி முதல் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு 8.30 மணிக்கு சக்தி டீவியில் கண்டு களிக்கலாம்.

இலங்கை மற்றும் உலகம் முழுவதிலுமுள்ள தமிழர் கலைத்துறையை உயர்த்தும் நோக்குடன், சக்தி டிவி தொடர்ந்தும் முயற்சி எடுத்துவருகிறது. இந்த இரண்டாவது சீசன் அந்த கனவுக்கு இன்னொரு பெரும் உரமாகவும் படிக்கட்டாகவும் அமைகிறது.

பிரான்ஸ்



காலப்பந்து போட்டி வெற்றி கொண்டாட்டங்களில்

# வெடித்தது கலவரம்: 560 பேர் கைது

பிரான்சில் இடம்பெற்ற சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டி வெற்றி கொண்டாட்டங்களில் வன்முறை வெடித்ததில், இரண்டு பேர் உயிரிழந்ததுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

ஜேர்மனியின் முனிச் நகரில், பாரீஸ் செயின்ட்-ஜேர்மைன் (பி.எஸ்.ஜி.) மற்றும் இன்டர் மிலன் அணிகளுக்கு இடையே சாம்பியன்ஸ் லீக் கால்பந்து இறுதி போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில், பி.எஸ்.ஜி. அணி 5-0 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றது. இதுவரை இல்லாத வகையில் இது மிகப் பெரிய வெற்றியாகும்.

இதனைத் தொடர்ந்து, பிரான்சின் பாரீஸ் நகரின் தெருக்களில் மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். அப்போது திடீரென வன்முறை பரவியது. அப்போது டாக்ஸ் நகரில், 17 வயது சிறுவன் கத்தியால் குத்தி கொல்லப்பட்டுள்ளான் என, அந்நாட்டுத் தேசிய பொலிஸ் படை தெரிவித்தது. இதேபோன்று பாரீஸ் நகரில் நடந்த கொண்டாட்டத்தின்போது, கார் ஒன்று மோட்டார்சைக்கிள் மீது மோதியது.

இதில், மோட்டார் சைக்கிளில் வந்த நபர் பலியானார். 20 வயதுடைய அந்த நபர், வன்முறையால் பலியானாரா என்பது உறுதி செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வன்முறையால் 2 பேர் பலியாகி உள்ளனர். வன்முறையைக் கட்டுப்படுத்த, பாரீஸ் நகர் முழுவதும் 5,400 பொலிஸார் குவிக்கப்பட்டனர். பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

இதனால் ஏற்பட்ட வன்முறையில், 192 பேர் காயம் அடைந்தனர். 264 வாகனங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. 692 தீ வைப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன், 560 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த மோதலில் சிக்கிய காவலர் ஒருவர் சுயநினைவற்ற நிலைக்குச் சென்று விட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கா



# பட்டமளிப்பு விழாவில் துப்பாக்கிச் சூடு

அமெரிக்காவின் மினியாபோலீஸ் நகரில் உள்ள மினசோட்டா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விழாவில், 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். அப்போது ஒரு மாணவன் திடீரென அங்கிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட ஆரம்பித்தான். இதனால் அங்கிருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர்.

இதில் 2 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய மாணவனை பொலிஸார் கைது செய்தனர். இதனையடுத்து அந்த பல்கலைக்கழக வளாகம் தற்காலிகமாக மூடப்பட்டது.

டோக்கியோ

# ஜப்பானில் நிலநடுக்கம்

ஜப்பானில் திங்கட்கிழமை(2) அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.0 ஆக பதிவானது. சக்திவாய்ந்த இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அதிர்ந்தன.

ஆனாலும், இந்த நிலநடுக்கத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை. அத்துடன், சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

அதேவேளை, ஹோகைடோ தீவில் ஞாயிற்றுக்கிழமை (1) நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6.1 ஆக அந்த நிலநடுக்கம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பெங்களூரு

புகையிலை பாவனைக்கு எதிரான

# சட்டம் கடுமையாகிறது

கர்நாடகத்தில் புகையிலை பொருட்கள் பயன்படுத்தி விட்டு பொது இடங்களில் எச்சில் துப்பினால் விதிக்கப்பட்ட அபராதம் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் புகையிலை பொருட்கள் விற்பனை மற்றும் பயன்படுத்துவது தொடர்பான சட்டத்தில் அரசு திருத்தம் செய்திருந்தது. இந்த சட்டத் திருத்த மசோதாவுக்கு ஜனாதிபதியும் ஒப்புதல் அளித்துள்ளார். இதன் காரணமாகக் கர்நாடகத்தில் புகையிலை பொருட்கள் பயன்படுத்திவிட்டு பொது இடங்களில் எச்சில் துப்பினால், இதற்கு முன்பு ரூ.200 அபராதம் விதிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் அந்த அபராத தொகையை கர்நாடக அரசு தற்போது ரூ.1,000ஆக உயர்த்தி உள்ளது. இதன்படி இனிமேல் பொது இடங்களில் புகையிலை பயன்படுத்திவிட்டு எச்சில் துப்பினால், அவர்களுக்கு ரூ.1,000 அபராதம் விதிக்கப்படும்.

அதுபோல், இதற்கு முன்பு 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு பீடி, சிகரெட் உள்ளிட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. இந்த சட்ட திருத்தம் மூலமாக இனிமேல் 21 வயது நிரம்பியவர்களுக்குத் தான் மாநிலத்தில் சிகரெட் உள்ளிட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்ய முடியும்.

21 வயதுக்குக் குறைவானவர்களுக்குப் புகையிலை பொருட்கள் விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கும் ரூ.1,000 அபராதம் விதிக்கப்படும். அதுபோல், கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள 100 மீட்டர் சுற்றளவுக்கு உள்ள கடைகளில் புகையிலை பொருட்கள் விற்பனை செய்ய



அனுமதி கிடையாது.

மேலும் பெங்களூரு உள்பட மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து ஹூக்கா பார்களுக்கு தடை விதித்தும் மாநில அரசு அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி இனிமேல் கர்நாடகத்தில் ஹூக்கா பார்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்று கர்நாடக அரசு அறிவித்துள்ளது.

மேலும் அரசின் விதிமுறைகளை மீறி சட்டவிரோதமாக ஹூக்கா பார்கள் நடத்தினால், அவர்களுக்கு 1 ஆண்டு முதல் 3 ஆண்டு வரை சிறை தண்டனை விதிக்கப்படுவதுடன், ரூ.50 ஆயிரம் முதல் ரூ.1 இலட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 30 அறைகள் அல்லது 30-க்கும் மேற்பட்டோருக்கான இருக்கைகள் கொண்ட ரெஸ்டாரண்ட்டுகளில் கண்டிப்பாக புகையிலை பொருட்கள் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு என தனியாக இடவசதி அல்லது அறையை ஒதுக்க வேண்டும் என்றும் அரசு தனது அரசாணையில் தெரிவித்துள்ளது.

ஐ.பி.எல்:

# இறுதிப் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ்



இந்தியன் பிரீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) இறுதிப் போட்டிக்கு பஞ்சாப் கிங்ஸ் தகுதி பெற்றுள்ளது.

அஹமதாபாத்தில் ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்ற இரண்டாவது தகுதிகாண் போட்டியில் மும்பை இந்தியன்ஸை வென்றே இறுதிப் போட்டிக்கு பஞ்சாப் கிங்ஸ் தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட மும்பை, சூரியகுமார் யாதவ்வின் 44 (26), திலக் வர்மாவின் 44 (29), ஜொனி பெயார்ஸ்டோவின் 38 (24), நாமன் திர்ரின் 37 (18) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் கைல் ஜேமிஸன் 4-0-30-1, யுஸ்வேந்திர சஹால் 4-0-39-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 204 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயரின் ஆட்டமிழக்காத 87 (41), நெஹால் வதேராவின் 48 (29), ஜொஷ் இங்லிஸின் 38 (21), பிரியன்ஷ் ஆர்யாவின் 20 (10) ஓட்டங்களோடு 19 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் மிற்செல் சான்ட்னெர் 2-0-15-0, ட்ரெண்ட் போல்ட் 4-0-38-1, ஹர்திக் பாண்டியா 2-0-19-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஐயர் தெரிவானார்.

இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவை பஞ்சாப் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிக்கு முன்பதாக

# ப்ரோட் பயிற்சி



சர்வதேச கிரிக்கெட் சபையின் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான உலகக் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்பதாக தென்னாபிரிக்காவுடன் இங்கிலாந்தின் முன்னாள் வீரர் ஸ்டூவர்ட் ப்ரோட் பணியாற்றவுள்ளார்.

கடந்த 2023ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரின் முடிவில் ஓய்வு பெற்ற பின்னர் தொலைக்காட்சி வர்ணனையாளராகப் பணியாற்றும் ப்ரோட்டுக்கு இதுவே முதலாவது பயிற்சியாளர் பணியாகும்.



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்ற இங்கிலாந்து, கார்டிஃப்பில் ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையையடுத்தே இன்னுமொரு போட்டி இருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

மே. தீவுகள்: 308/10 (47.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: கேசி கார்ட்டி 103 (105), ஷே ஹோப் 78 (66), பிரெண்டன் கிங் 59 (67) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடில் ரஷீட் 4/63, சஹிப் மஹ்மூட் 3/37, பிறைடன் கார்ஸ் 1/59)

இங்கிலாந்து: 312/7 (48.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜோ றூட் ஆ.இ 166 (139), வில் ஜக்ஸ் 49 (58), ஹரி ப்றூக் 47 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 4/31, ஜேடன் சியல்ஸ் 1/56)

போட்டியின் நாயகன்: ஜோ றூட்

இந்நிலையில் இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது ஓவலில் இன்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

# குன்ஹாவைக்கு யுனைட்டெட் இணக்கம்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸின் முன்களவீரரான மதெயுஸ் குன்ஹாவைக் கைச்சாத்திடுவதற்கான ஒப்பந்தமொன்றுக்கு இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் இணங்கியுள்ளதாக இரண்டு கழகங்களும் ஞாயிற்றுக்கிழமை(01) தெரிவித்துள்ளன.

யுனைட்டெட்டில் ஓராண்டு நீடிக்கக் கூடிய தெரிவை கழகம் கொண்டிருக்கின்ற ஐந்தாண்டு ஒப்பந்தமொன்றில் 26 வயதான குன்ஹா இணைகிறார்.



# ஓய்வை அறிவித்தார் மெக்ஸ்வேல்

ஆஸ்திரேலியாவின் மறக்கமுடியாத ஒரு நாள் போட்டிகளில் சிலவற்றிற்குப் பின்னால் இருந்தவர், க்ளென் மேக்ஸ்வெல், தனது 13 ஆண்டுகால ஒருநாள் கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெறுவதாக திங்கட்கிழமை (02) அறிவித்தார்.

2012ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்காக விளையாடிய மெக்ஸ்வெல், தனது ஓய்வை, திங்கட்கிழமை(02) அறிவித்தார், அவர் தனது 149 ஒருநாள் போட்டிகளில் இருந்து கிட்டத்தட்ட 4,000 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

2022இல் ஏற்பட்ட ஒரு பயங்கரமான விபத்தில் இடது காலை உடைத்து தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் 36 வயதான அவர், பெப்ரவரி மாதம் நடந்த சாம்பியன்ஸ் டிராபி போட்டியின் போது தேர்வுத் தலைவர் ஜார்ஜ் பெய்லியிடம், 2027 ஒருநாள் உலகக் கோப்பைக்கு வருவேன் என்று தான் நினைக்கவில்லை எனவும் கூறினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 03, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.